1215

Registered No. M. 1363

ஓம்

தருமசீலன்.

30 AUG

பத்திராதிபர்: தி. ஆதிநயினார்.

புத்தகம் 6. } உருத்திரோற்காரி௵ ஆடி௴ 1923-௵ ஜூலை௴ { சஞ்சிகை 4.

விஷய சூசிகை.

	விஷயம்.	பக்கம்.
1.	நீதிச் செய்யுட் சிந்தாமணி	... 73
2.	சினத்தைப்பேணிற் றவத்திற்கழகு	... 74
3.	நற்சுகக் கண்ணீ	... 76
4.	பண்டைத் தமிழ் நாட்டின் வல்லரசுகள்	... 77
5.	இரகு வம்சம்	... 80
6.	ப்ரஸ்னோத்தர மாணிக்யமாலா	... 89
7.	கல்வி	... 92
8.	நாவல் (இரகஸ்யபுரி மர்மம்)	... 94

வருஷசந்தா ரூபா 1.] 1923. [தனிப்பிரதி அணா 0-2-0

DHARMASEELAN PRESS, MADRAS

தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறு[illegible] வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்கள்[illegible] வெளிவராத நூல்கள், அறிவை விருத்தி செய்யத்தக்கபல நீதி[illegible] வியாசங்கள், பலவினோதக் கதைகள், நாவல்கள், பொது வர்த்தம[illegible]னங்கள்முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

சந்தா விவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0

பினும், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணா 0—2—0.

கவனிப்பு.

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையும்சுத்தமாக எழுதியனுப்ப வேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களை எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினார், "தருமசீலன்" ஆபீஸ்.
26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

த (…

" அகர … தல வெழு…
பகவ… முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 6	உருத்திரோற்காரிஸு ஆடிமீ 1923ஸு சூலைமீ	சஞ்சிகை 4.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

தூங்குறிக் கிடப்பதாலும், காய்கனிகளை யுண்பதாலும் பழவினை தீராதென்பது.

" தூங்குறிக் கிடந்து காயும் பழங்களுந் துய்ப்ப நில்லா
பாங்கலா வினைக ளென்றார் பகவனு செங்கட் கென்னின்
ஓங்குநீண் மரத்திற் றூங்கு மொண்சிறை யொடுங்கல் வாவல்
பாங்கரிற் பழங்க டுய்ப்பப் பழவினை பரியு மன்றே."

(இ-ள்.) "(பழவினைகழிதற் கேதுவாகிய உண்மைத் தவத்தைச் செய்யா தொழித்துப் போலித்தவத்தைச் செய்கின்றவர்களே! நீங்கள், 'எங்களுக்குப் பகவனார் தூங்குகின்ற உறியிலே கிடந்தாடிக் காய்களையும், பழங்களையுந் தின்ன, நன்மையல்லாத பழைய தீவினைகள் உங்களிடத்தே நில்லாமல் நீங்கும் என்றார்' என்று சொல்லி இவற்றை அனுஷ்டிப்பீராயின், (இவற்றால் தீவினைகள் நீங்கமாட்டா; அங்ஙனம் உங்கள் கொள்கையின்படி இவற்றால் அவை நீங்குவதாயிருந்தால்) வளர்கின்ற நீண்டமரத்தில் தூங்குகின்ற பிரகாசமுள்ள சிறைகளையுடைய ஒடுங்குதல் பொருந்திய வெளவால் பக்கத்திலுள்ள பழங்களைத் தின்னுவதால் அதன் பழவினையும் நீங்குமல்லவா? (அஃதில்லாததால் உங்கள் பழவினைகளும் நீங்குதலில்லை)" என்பதாம்.

(வி-ரை) பழவினைகளை யொழிக்க விரும்புவோர் அகத்துறவு பூண்டு மெய்த் தவம்புரியவேண்டும்; அதைவிட்டு யோகம் புரிகின்றோமென்ற உறியிலே கிடந்தாடுவதாலும், காய்கனிகளை உண்பதாலும் கர்மங்கெடாது. அங்ஙனம் அவற்றால் கர்மங் கெடுவதாயிருந்தால் மரத்தில் தூங்கிக்கிடந்து பழங்களை யுண்ணும் வெளவாலுக்கும் பழவினை கெடவேண்டும்; அங்ஙனம் கெடுதல் ஒருபோது மில்லையாதலின் தூங்குறிக்கிடந்து காய்கனிகளை யுண்ணுவார்க்கும் கர்மங்கெடுதல் இல்லையாம். இது, அகத்துறவின்றி மேற்போக்காகப் போலித் தவம்புரிவோர்க் கறிவுறுத்தற் பொருட்டுக் கூறப்பட்டதாம். ஆதலின், இதனால் 'அகத்துறவுடையார்க்கே கர்மக்கேடுண்டாய் வீடுபேறு சித்திக்கும்' என்பது பெறப்படும்.

துய்த்தல்-அனுபவித்தல்; தின்றன் மேனின்றது. பாங்கு-அழகு, நன்மை. ஒடுங்கல்வாவல்-ஒடுங்குதலையுடைய வெளவால்; இது மரத்திற் றூங்கும்போது ஒடுங்கியே கிடக்கும். பாங்கர்-பக்கம். பரிதல்-நீங்குதல், கெடுதல். அன்றே-அசை. (சீவகசிந்தாமணி. 1429)

மராற்காரிஷூ ... மீ.

"சினத்தைப்பேணிற் றவத்திற்கழகு."

இதன்பொருள்:—"சினத்தை-கோபத்தை, பேணின்-(ஒருவன் தன்னிடத்தே வராதபடி) காத்துக் கொள்வானாயின், (அது), தவத்திற்கு-(அவன் செய்யும்) தவத்தினுக்கு, அழகு-அழகாகும்" என்பதாம்.

கோபமானது எல்லா வகுப்பினர்க்குமே மிக்க கெடுதியைத் தரத்தக்கது. ஒருவன் கோபத்தைக் கைக்கொள்வானாயின் பிறர்செய்த சிறிய குற்றத்தையும் சகிக்காமல் அவனே டெதிர்க்கத் தொடங்குவான்; அவ்வெதிர்ப்பால் சண்டை சச்சரவுகள் அதிகமாக உண்டாகும்; அங்ஙனமாகவே அவற்றால் அவனுக்கு அடி உதை முதலியன கிடைப்பதால் துன்பம் அதிகரிக்கும்; அவனும் எதிரியைத் தாக்கிக் கொலைக்குற்றம் முதலியவற்றிற் குள்ளாவான்; அவற்றால் கோர்ட்டு வழக்குகள் நேரும்; அவற்றால் பொருட் செலவாகி அவன் கெட்டே போவான். இன்னும் அவன் தற்கொலை செய்துகொள்ளவும் துணிவான். இக்கோபத்தால் அற்ப விஷயத்திலும் தங்கள் உயிரைப் போக்கிக் கொண்டார் பலருண்டு: பாண்டிநாட்டைச் சார்ந்த ஒரு சிறுகிராமத்தில் வேளாளர் மரபிலுதித்த மூக்கையபிள்ளை யென்பவரொருவரிருந்தார். இவர் மூர்க்ககுணத்தையும், பொறாமையையும், தான் என்ற அகங்காரத்தையும், குரங்குப் பிடிவாதத்தையும், லாகிரிப் பழக்கத்தையும், தீராக்கோபத்தையும் தமக்கு முக்கிய பூஷணங்களாகக் கொண்டவர். அவற்றுள் இவருக்குக் கோபந்தான் குருபீடம். இவர் நல்லதைச் செய்தாலும் கெட்டதைச் செய்தாலும், நன்மொழி புகன்றாலும் தீமொழி புகன்றாலும் இவருடைய நோக்கத்திற்கு எவரும் மறுப்புச் சொல்லவே கூடாது. எப்பேர்ப்பட்டவர்களுடைய வார்த்தையையும் காற்றாசுபோல அவமதித்துத் தள்ளித் தம்முடைய பேச்சையே நிலைநிறுத்துவதில் இவர்பேர் போனவர்; இவருக்குக் கோபம் வந்து விட்டாலோ உயிர் போவது வருவது தெரியாது. இத்தகைய இந்தச்சாது ஒருநாள் வீட்டை

...452

விட்டு வெளியிற் செல்
பூண்டுக் குழம்பு வைக்
ஊர் நாட்டுப் புறமானதால் அப்ப
ளைப்பூண்டு அகப்படவில்லை. அதனால் அ
குழம்பு வைக்கவில்லை. வெளியே போயிருந்த பிள்ளை
ம்பி வந்து சாப்பாட்டுக்கு உட்கார்ந்தார். எதிரில் இலை போட
பட்டிருக்கிறது. அவர் அப்போது மருமகளை நோக்கி 'வெள்ளைப் பூண்டுக் குழம்பு வைத்தாயா?' என்று வினவினர். அவள், 'இல்லை' என்றாள். பிள்ளையவாள்தான் சாந்தமூர்த்தியன்றோ! அவருக்கு வந்துவிட்டது கோபம் வடவாமுகாக்கினிபோல்; அவர் அடங்காக் கோபத்தால் பற்களை நெறநெற வென்னக் கடித்துக்கொண்டு மருமகளைப் புலிபோற் சீறிக் கைகளை ஓங்கித் தரையில் அறைந்து "ஆச்சா!" என்று இடி இடித்ததுபோல் ஒரு பெருஞ்சத்த மிட்டார். அந்தோ! கோபம் அளவு மீறியதால் அந்த நிமிஷமே அவருடைய இருதயம் வெடித்து விட்டது; அப்பொழுதே அவர் இரத்தங்கக்கிக் கொண்டு பிணமானர். ஊரார் ஓடிவந்து நடந்ததை யுணர்ந்து, 'அடபாவி! வெள்ளைப்பூண்டுக் குழம்பிற்காக உயிரைப் போக்கிக் கொண்டானே' என்று அவரை எடுத்தடக்கம் செய்தார்கள்.

இன்னும் கோபத்தால் நடந்த கேடுகள் எத்தனையோ இருக்கின்றன. இங்ஙனம் ஒருவனிடம் உண்டாகும் கோபம் அவனையே கொன்றுவிடக் கூடியதாயிருத்தலின், தன்னைக்காக்க விரும்புவோன் அதனைத் தன்னிடத்து வர வொட்டாமற் காத்துக் கொள்ளவேண்டும்; இது பற்றியே திருக்குறளாசிரியரும்,

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்."

என்று கூறினர். இவ்வாறு கோபம் எல்லோருக்குமே அகற்றக் கூடியதெனினும், தவத்தினர் அவசியம் விலக்கக் கூடியதாம். ஏனெனில் மனத்தைக் கலக்கும் சிறிய காரியமும் தவத்தைக் கெடுக்கக் கூடியதாம். ஆதலின், கோபம் பெரியமனக் குழப்பத்தை உண்டாக்கி விடக்கூடியதா யிருப்பதால் அது, தவத்தை அடியோடு கெடுத்துவிடக் கூடியதாம். அக்கோபத்தை ஒழித்தால் மாத்திரமே தவம் கைகூடும். தவமுடையார், தமக்கு யாரென்ன தீங்கு செய்தபோதிலும் அதனை மனங்கொள்ளாது சாந்தத்தை வகித்துத் தவத்திலேயே புத்தியைச் செலுத்திக் கொண்டிருக்க வேண்டும்; அப்படி யிருந்தால் மாத்திரமே தவம் சிறப்புற்று நிறைவேறும்.

...ம் தவமே சிறந்ததாக
...க்கியமாக இங்கே கோ
...குறித்தார் ஔவைப் பிராட்டியார்.
...ரும் கோபத்தைத் தீமையுடைய தென்றுணர்
... விஷயங்களிலும் நீக்குவதோடு முக்கியமாகத் தவத்
...ல அது தலை யெடுக்க வொட்டாது செய்து அருந்தவம் முயன்று பெருங்கதி யடைவாராக.

(திருவருட்சகாயம்.)

நற்சுகக் கண்ணி.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை3, பக்கம்-52.)

8. பொல்லாப் பொறுமைவிட்டுப் புந்தியிலே சாந்தமுற்று
எல்லார்க்கு நன்மை யியற்றுவர்க்கு நற்சுகமே.

9. கண்டவரோ டெல்லாம் கடும்பகைகள் கொள்ளாமல்
மண்டலத்தில் நேயமதை வகிப்பார்க்கு நற்சுகமே.

10. மித்திரபே தம்புரிந்து மெய்யா முறவினரை
மெத்தப் பிரித்து விடாதார்க்கு நற்சுகமே.

11. நல்விரதம் பூண்டுதமை நாடிவரும் யாசகரின்
பொல்லா வறுமைதனைப் போக்குவர்க்கு நற்சுகமே.

12. மெத்தப் படித்தும் விவேகமற்ற தீயோரை
நத்தாத வர்க்கிந்த நானிலத்தில் நற்சுகமே

13. தங்களிடம் குற்றமிகச் சார்ந்திருக்க மற்றவரைப்
பங்கமுற வேபழிப்பார் பற்றுவிடி னற்சுகமே.

14. கள்ளருந்தும் தீய கசடர்முகம் பாராமல்
கள்ளமிலா நெஞ்சினரைக் கலந்திருத்தல் நற்சுகமே.

15. வம்பும் வழக்குமிட்டு மன்றேறிச் செல்வமெலாம்
அம்புவியி லேயழிக்கா வறிவினர்க்கு நற்சுகமே.

16. தாய்தந்தை யர்மனது சற்றேனும் வாடாமல்
சேய்புரிந்தா லன்னவற்குச் சேர்ந்திருக்கும் நற்சுகமே.

(தொடரும்)

சேம்பைக்கிழார்.

பண்டைத

பண்டைத் த

கரிகாற

பண்டைக்காலத்தில் நாகரீகத்திலும், செல்வத்திலும், கல்வியிலும், கைத்தொழில்களிலும் எவ்வளவோ சிறப்புற்றிருந்தது: இற்றைக்குச் சற்றேறக்குறைய இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாடு சேர சோழ பாண்டிய மன்னர்களால் நாகரீக முறைகளில் வெகு சிறப்புடனும் செல்வாக்குடனும் ஆட்சி செய்யப்பட்டது. இம்மன்னருள் சோழ வம்சத்தவரே மிகவும் பிரசித்தி பெற்றிருந்தனர். இந்த வம்சத்தில் உதித்த மன்னர் தமிழ் நாட்டிற்கு எவ்வளவோ நன்மை புரிந்து, தமிழரின் செல்வத்தையும் செல்வாக்கையும் பெருக்கி யிருக்கின்றனர்.

சோழ மன்னருள் கரிகாற் சோழனே மிகவும் பிரசித்தி பெற்றவனாகும். இவனுடைய வீரச் செயல்களையும், கல்விப் பிரியத்தையும், கொடை மாட்சியையும் அறியாதார் சிலரே. இவனுக்குக் கரிகாலன் என்றும், கரிகாற் பெருவளத்தான் என்றும் பெயர்கள் உண்டு. இவை காரணப் பெயர்களென்றும், இவன் 'யானைகளுக்கு யமன்' ஆனதால் கரிகாலன் என்னும் பெயர் பெற்றான் என்றும், ஒரு சமயத்தில் நேர்ந்த யுத்தத்தில் தீவிபத்தில் இவனுடைய கால் எரிந்து கருமையானதால் இவன் கரிகாற் சோழனெனப் பெயர் பெற்றானென்றும், இப்பெயர்களுக்கு இன்னும் பல காரணங்களும் கூறுவர் அறிஞர். இவன் அரசாண்டிருந்த காலத்தைப் பற்றித் தென்னிந்திய சரித்திராசிரியர்கள் பல விகற்பங்களான அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர்: ஸ்ரீமான் டாக்டர் கிஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள், கரிகாலச் சோழன் காலம், சங்கத்தின் இறுதிக் காலமாகிய கி. பி. முதல் அல்லது இரண்டாவது நூற்றாண்டென்று கூறியிருக்கின்றார்கள். அதாவது இற்றைக்கு 1800 வருஷங்களுக்கு முன்னதாகும். இதுவே காலஞ்சென்ற ஸ்ரீமான் கனகசபைப் பிள்ளை அவர்கள் கொள்கையும், தமிழ் ஆசிரியர்களில் பெரும்பான்மையோர் கொள்கையுமாம். ஆனால் சிலாசாஸன ஆராய்ச்சி இலாகாவைச் சேர்ந்த காலஞ்சென்ற வெ. வெங்கையரும், ஸ்ரீமான் **K. V.** சுப்ரமணிய ஐயரும் கரிகாலச் சோழன் கி. பி. ஆறாவது நூற்றாண்டில் இருந்திருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். இவர் தமது கூற்றுக்கு ஆதாரமாக 11 வது நூற்றாண்டு கீழச்சளுக்கிய

வர்கள் கூற்று இன்னும்
...ப்புக்கொள்ளக் கூடிய
...ான ஆட்சியைப்பற்றிப் பண்டைத்
..., கர்ண பரம்பரையாய்வரும் கதைகளாலும்
...து என்ன? இவனே காவிரிப்பட்டினத்தின் அமைப்பின்
...ருமையை உணர்ந்து அதைப் பலவாறு புதுக்கித் தனது இராஜதானியாக அமைத்துக் கொண்டவன். இப்பட்டினமே 'அக்காலத்தில் தமிழ் நாட்டின் முக்ய துறை முகமாய் இருந்தது. கரிகாலச் சோழன் காலத்தில் காவிரிப்பட்டினம் அடைந்திருந்த சிறப்பையும், பெருமையையும் அறியக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் செய்திருக்கும் 'பட்டினப்பாலை'யைப் படிக்கவேண்டும்; பட்டினப்பாலையில் துறை முகத்தில் நடக்கும் ஏற்றுமதி இறக்குமதிகளைக் குறித்து,

> "நீரினின்று நிலத்தேற்றவும்
> நிலத்தி னின்று நீர் பரப்பவு
> மளந்தறியாப் பல பண்டம்
> வரம் பறியாமை வந்தீண்டி
> யருங்கடிப் பெருங்காப்பின்
> வலியுடை வல்லணங்கினோன்
> புலி பொறித்துப் புறம்போக்கி
> மதிநிறைந்த மலிபண்டம்
> பொதி மூடைப் போரேறி"

எனவரும் வரிகளால் அக்காலத்துத் தமிழரின் வியாபாரச் சிறப்பும், கரிகாலனின் அரசாங்கத்தாரால் வணிகம் எத்துணை பாராமரிக்கப்பட்டதென்பதும் ஒருவாறு விளங்கும்.

கரிகாலச் சோழன் காலத்திய சிலா சாஸனங்களில் ஒன்றும் கிடைக்திலதெனினும் அக்காலத்திய தமிழ் நூல்களிலிருந்து நாம் அவனரசாட்சியைப் பற்றி அறிந்து கொள்ளலாம். அவன் ராச்சியம் வடக்கே தெலுங்கு நாடுவரையிலும், தெற்கே மதுரைவரையிலும் பரவியிருந்ததெனக் கருதப்படுகிறது. தொண்டை நாட்டிலுள்ள காஞ்சிபுரம், சோழமன்னர் ஆதீனத்தில் சோழராஜப் பிரதிநிதிகளால் ஆளப்பட்டுவந்தது. இவர்களுள் முக்கியமானவன் தொண்டைமான் இளந்திரையனும்.

கரிகாலன் சிறந்த யுத்தவீரனென்பது இவன் வெண்ணியென்னும் போர்க்களத்தில் சேரமான் பெருஞ்சேரலாதனை முறியடித்த பெருமையால் விளங்கும். இது,

"நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர் கடந்த நின்னாற்றற் றோன்ற
வென்றோய் நின்னினும் நல்ல னன்றே
கலிகொள்யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந்தோனே."

என்ற புற நானூற்றுச் செய்யுளால் நன்கு விளங்கும். இன்னும் கரிகாலன் அக்காலத்து மன்னர் பலரைப் பன்முறை முறியடித்திருக்கவேண்டும். ஆனால் இவர்கள் யாரென்று இப்பொழுது புலப்படவில்லை.

நிற்க, கரிகாலன் தமிழ் நாட்டுக்குச் செய்திருக்கும் நன்மைகள் யாவை? இவன் 'புகார்' என்னும் காவிரிப்பூம் பட்டினத்தை ஸ்தாபித்து அதைச் சிறப்பித்து அன்னிய நாட்டு வர்த்தகத்தை விருத்தி செய்த பெருமையைக் கவனித்தோம். இனி விவசாயத்திற்கு இன்றியமையாத நீர் பாய்சன விஷயமாகக் கரிகாலன் செய்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. அக்காலத்தில் வருஷாவருஷம் வெள்ளமெடுத்து நூற்றுக்கணக்கான வீடுகளையும், கிராமங்களையும், பயிரிட்டிருந்த வயல்களையும் அழித்துவந்தது. இதைக் கண்ட கரிகாலன் வெள்ளத்தால் தனது பிரஜைகளுக்கு ஏற்பட்ட உயிர்ச் சேதத்தையும், உணவுப்பொருளின் நஷ்டத்தையும் தடுக்க, காவிரி நதிக்கு இரண்டு பக்கங்களிலும் வெகு தூரம் உயர்ந்த கரைகளைக்கட்டி முடித்தான். இது கட்டிமுடிய எவ்வளவோ வருஷங்கள் பிடித்திருக்கும். நீர் பாய்சன சௌகரியமாக வெண்ணாறு அரசலாறு முதலான கிளைநதிகளையும் வெட்டுவித்தான். இவற்றால் தமிழ்க் குடிகளுக்கு ஏற்பட்ட நன்மையின் அளவை இக்காலத்தில் உணரல் முடியாது.

இன்னும் கரிகாலன் தமிழ் நாட்டை 24 கோட்டங்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் பஞ்சாயத்து நிர்வாக முறைமையை ஏற்படுத்தியது குறிப்பிடத் தகுந்தது. இவற்றுள் நமது சென்னை நகர் புழற் கோட்டத்திலுள்ளது. காஞ்சிபுரம் எயிற்கோட்டத்துளது. இன்னும் கரிகாற்சோழன் காடு நிறைந்திருந்த பாகங்களை அழித்து நாட்டுவளம் ஏற்படுத்தினான். குளம் முதலிய வெட்டி நீர்வளத்தைப் பெருக்கினான். இதையே பட்டினப்பாலையில்,

"காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்கு நிலைமாடத்து றந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழை யமைத்து"

என்று உறுத்திரங்கண்ணனார் பாடி யிருக்கின்றனர். இவன் கொடை மாட்சிக்கே எல்லைக்கல்லா யிருந்தனனென்பதும் தமிழ்க்கவிகளிடத்தில் அபிமானங் கொண்டவனென்பதும் 'பட்டினப்பாலை' ஆசிரியரான உருத்திரங் கண்ணனாருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்த பெருமையினால் விளங்கும். இவ்விஷயம் கலிங்கத்துப் பரணியில் "தழுவு செந்தமிழ்ப் பரிசில்வாணர் பொன், பத்தொடாறு நூறாயிரம் பெறப்பண்டு பட்டினப்பாலை கொண்டதும்" எனவரும் வரிகளால் விளக்கும்.

(ஒரு சரித்திரமாணவர்)
ரா. கோபாலசாமி

25, பவழக்கார வீதி
சென்னை.

இரகு வம்சம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-3, பக்கம்-61.)

(இரண்டாவது ஸர்க்கம்.)

புகழையே பொருளாக மதிக்கும் அரசன், படுக்கையை விட்டு எழுந்து, ரிஷியின் பசு, தன்மனைவி சாத்தின சந்தனம் புஷ்பமாலை இவைகளைப் பெற்றுக் கொண்டதும் காட்டுக்குப் போவதற்காக அதை அவிழ்த்துவிட்டான். அப்பொழுது அதன் கன்று பால் குடித்துக் கட்டப்பட்டிருந்தது. கற்புடைய பெண்களுக்குள் முந்தினவளாகக் கொண்டாடத் தக்கவளும், 'திலீப'னுடைய தர்ம பத்தினியுமான ஸுதக்ஷிணை, குளம்புகள் வைக்கப்படுவதனால் பரிசுத்தமான தூசியையுடைய அப்பசுவின் வழியை, ஸ்மிருதிகள் வேதத்தின் வழியைப் பின்தொடர்வதுபோல, பின்தொடர்ந்தாள். புகழால் பெருமை பெற்றவனும், இரக்கமுள்ளவனுமாகிய மன்னவன், தனது காதலியை இருப்பிடத்திற்குத் திரும்பிச் செல்லும்படி அனுப்பிவிட்டு, காமதேனுவின் கன்றும், தனது பாலால் நான்கு சமுத்திரங்களையும் தோற்கடிக்க வல்லதுமான பசுவை, நான்கு சமுத்திரங்களையும் பால் மடிகளாகப்பெற்றுப் பசுவேஷந் தரித்துக் கொண்டிருக்கும் பூமியைப் பாதுகாப்பதுபோலப் பாதுகாத்தனன்

நியமத்தின் பொருட்டுப் பசுவைப் பின் தொடர்வோனாகிய அரசன், தன்னைப் பின் தொடர்ந்துவரும் * பரிவார ஜனங்களைக்கூட வர வேண்டாமென்று நிறுத்திவிட்டான். அவனுடைய சரீரத்தைப் பிறர் பாதுகாக்க வேண்டியதில்லை. மனுவின் ஸந்ததி எப்பொழுதும் தன் பராக்கிரமத்தினாலேயே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்.

அந்தச் † சக்கிரவர்த்தியானவன் இனிய ரஸமுள்ள புற்களைப் பிடிப்பிடியாகப் பிடுங்கிக் கொடுத்தும், அதற்குத் தினவு தீரச் சொறிந்து கொடுத்தும், காட்டு ஈக்களை ஓட்டியும், அதற்கு இஷ்டமான இடத்தில் அதைப் போகவிடுத்தும், அத்தேனுவுக்குத் தொண்டு புரிவதையே தொழிலாகக் கொண்டிருந்தனன். அவ்வரசன் அப்பசு நிற்கும்பொழுது தானும் நின்றும், அது நடக்கும்பொழுது தானும் நடந்தும், அது படுத்துக் கொள்ளும்பொழுது தானும் உட்கார்ந்தும், அது ஜலத்தைக் குடிக்கும்பொழுது தானும் நீரருந்தியும் அப்பசுவை அதன் நிழல்போலப் பின் தொடர்ந்து சென்றான். விருதுகள் நிறுத்திவிடப் பட்டபோதிலும் தேஜோ விசேஷத்தினால் ஊகிக்கக்கூடிய ராஜலக்ஷ்மீ விலாஸத்தோடு கூடிய திலீபனது மதப்பெருக்கம் வெளிப்படாமல் உள்ளே மதம் சூழ்ந்து கொண்டிருக்கும் உத்தம ‡ கஜத்தைப்போல விளங்கினன். கொடிகளின் கம்பிக்கொடிகளால் தலைமயிரைக் கூட்டிக் கட்டிக்கொண்டிருந்த காவலன், வில்லில் நாணேற்றி வைத்துக்கொண்டு, காட்டு முனீசுவரரின் பசுவைக் காப்பதென்கிற சாக்கின்பேரில் கானகத்திலுள்ள கொடிய விலங்குகளை அடக்க வந்தவனைப்போல் திரிந்தான்.

பரிவாரத்தை நிறுத்திவிட்டுத் தனியாய்ச் செல்லுகின்றவனும், வருணனுக்கு ஒப்பானவனுமான திலீபனுக்கு, அவன் செல்லும் வழிக்கு இருபுறத்திலுமுள்ள மரங்கள், தங்கள்மீது உட்கார்ந்திருக்கும் களிப்பைக் கொண்ட பறவைகளின் குரல்மூலமாகக் கட்டியத்தைக்கூறின. இளங்கொடிகள், வாயுவால் அசைக்கப்பட்டு, வாயுவின் தோழ (அக்கினியி)னுடைய தேஜஸோடு கூடியவனும், பூஜிக்கத்தக்கவனும், தங்கள் சமீபத்திலிருப்பவனுமான திலீபன் பேரில், நகரவாசிகளான கன்னிகைகள் உபசாரத்துக்குப் பொரிவாரி இறைப்பதுபோலப் புஷ்பங்களைச் சொரிந்தன. இவன் கையில் வில்பிடித்திருந்தாலும், இவனது மனம் கருணையால் முற்றும் நிறைந்திருப்பது, சந்தேகத்திற்கு இடமற்ற அந்தக் காரணத்தினால் விளங்கிற்று. ஆகையால் பெண்மான்கள், இவனுடைய தேகத்தைப் பார்த்துத் தாங்கள் மகா விசாலமான கண்களைப் பெற்றிருத்தலின் பயனைப்பெற்றன. காற்றானது § துவாரங்களில் நுழையும்போது சப்

---

* பரிவார ஜனங்கள் = சேவகர் முதலியோர்; † சக்கிரவர்த்தி = உலகனைத்தையும் ஒரு குடைக்கீழ் ஆளவல்லவன்; வார் [illegible] கமன.
‡ கஜம் = யானை; § துவாரம் = பொத்தல்.

திக்கின்ற 'கீசக'மென்னும் மூங்கில்களைப் புல்லாங்குழலாகக் கொண்டு புதர்களில் வனதேவதைகளால் உரக்கக் கானம் பண்ணப்படும் தனது கீர்த்தியை அரசன் கேட்டான். மலையருவிகளின் நீர்த்திவலைகளோடு கூடியதும், தன்னால் சற்று அசைக்கப்பட்ட மரங்களிலுள்ள மணமேறப் பெற்றதுமான காற்று, வெயிலில் குடையில்லாமையால் களைப்படைந்தவனும், * ஆசாரத்தினால் பரிசுத்தமாயிருந்தவனுமான அரசனைச் சேவித்தது.

காவலனான திலீபன் வனத்தில் நுழைந்தவுடன், காட்டுத்தீ மழையின்றியே அணைந்து விட்டது. புஷ்பங்களும் பழங்களும் வெகு பலமாக உற்பத்தியாயின. மிருகங்களில் வலுத்தது இளைத்ததை வருத்தவில்லை. சூரியனுடைய பிரபையானது திசைகள் யாவற்றிலும் சஞ்சரித்து அவைகளைச் சுத்தப்படுத்திவிட்டுப் பகலின் முடிவில் அஸ்தமன மடையத் தொடங்கிற்று. இளந்தளிர் போல் சிவந்த முனிவரின் பசுவும் அவ்விதமாகவே எல்லாத் திசைகளிலும் சுற்றித்திரிந்து, அவைகளைச் சுத்தப்படுத்திவிட்டு, அந்திநேரத்தில் தன்னிருப்பிடத்தை நோக்கிச் செல்லப் புறப்பட்டது. யாகங்கள், சிரார்த்தங்கள், விருந்தோம்பல் இவைகளுக்கே உபயோகப்படும் பசுவை நடுலோகபாலன் பின் தொடர்ந்தான். பெரியோரால் நன்கு மதிக்கப்பட்ட அரசனோடு கூடிய அப்பசு, † அநுஷ்டானத்தோடு கூடிய பிரத்தியக்ஷமான சிரத்தையைப்போல விளங்கிற்று.

அவ்வேந்தன் குட்டைகளிலிருந்து எழுந்து வெளியில் வரும் காட்டுப்பன்றிக் கூட்டங்களையும், தமது கூடுகளை நோக்கிப் பறக்கும் மயில்களையும், புற்றரையில் படுத்திருக்கும் மான் கூட்டங்களையும், இருண்டு கொண்டுவரும் காடுகளையும் பார்த்துக்கொண்டு வந்தான். மடியைத்தூக்கி நடக்கும் சிரமத்தால் தலையீற்றுக் கிடாரியாகிய நந்தினியும் தன் உடம்பின் கனத்தால் அரசனும் தபோவனத்திற்குத் திரும்பி வரும்வழி, அழகாய் (மெள்ள) நடந்துவருவதனால் அலங்கரிக்கப்பட்டது. பெண்ணரசி (ஸுதக்ஷிணை)யானவள் வெகு நேரத்திற் கொருதரம் வெகு சோம்பலாய் வாய் கோட்டிக்கொண்டிருந்து பட்டினி கிடந்தவைகளைப்போன்ற கண்களால் காட்டிலிருந்து திரும்பின வஸிஷ்டர் பசுவின் பின்னே வருகின்ற திலீபனைப் பார்த்தாள். பூபாலனால் முன்னே நடத்தப்பட்டும், பூபாலன் பத்தினியால் எதிர்சென் றழைக்கப்பட்டும் வந்த அப்பசு, அவ்விருவருக்கும் மத்தியில், பகல் இரவு இவ்விரண்டுக்கும் மத்தியிலுள்ள அந்திநேரத்தைப்போல விளங்கிற்று.

அப்பொழுது ஸுதக்ஷிணை, அக்ஷதைப் பாத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு அதனைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து,

---

* ஆசாரம் = ஒழுக்கம்;

† அநுஷ்டானம் = விதிக்கப்பட்ட கிரியைகளைச் செய்தல்.

அப்பசுவின் இரு கொம்புகளுக்கும் இடையிலுள்ள விசாலமான விடத்தைத் தன் காரியசித்தியின் வாசலைப்போலப் பூஜித்தாள், அப்பசு தன் கன்றினிடம் போவதற்கு ஆவலுள்ளதாயிருந்தும். தாகவ்ள் செய்த பூஜையைச் சாவதானமாய் ஏற்றுக்கொண்டதென்று அத்தம்பதிகள் சர்ந்தோஷமடைந்தனர். ஏனெனில், இத்தேனுவைப் போன்றவர்கள் தமது பக்தர்களிடம் காட்டும் அநுக்கிரகக் குறிகள், விரைவில் பலனைக் கொடுப்பவைகளாயிருக்கின்றன. தனது * புஜபலத்தினால் பகைவர்களை வேரோடுகளைந்து நாசஞ்செய்த திலீபன், தனது குருவினுடையவும் குருபத்தினியுடையவும் பாதங்களில் நமஸ்கரித்து, சாயங்காலம் செய்யவேண்டிய அநுஷ்டானத்தையும் செய்து முடித்து, பால் கறந்தானபிறகு படுத்துக்கொண்ட பசுவிடம் திரும்பிப் போய்ச் சேர்ந்தான்.

† இரக்ஷகனாகிய திலீபனும் அவன் மனைவியும் அப்பசுவுக்கு உணவு முதலியவற்றையும் சமீபத்தில் சந்தி விளக்கையும் வைத்துக் காத்துக் கொண்டிருந்து, மெள்ளமெள்ள அப்பசு தூங்கிய பிறகு இவர்களும் படுத்துக்கொண்டனர். பசு காலையில் எழுந்ததும் இவர்களும் படுக்கையை விட்டு எழுந்திருந்தனர். எளியோர்களின் கஷ்டங்களை நீக்குகின்றவனும், மகா கீர்த்திபெற்றவனுமான திலீபன், தனது பட்டமகிஷியோடு தனக்குச் சந்ததியுண்டாக வேண்டுமென்று மேற்கூறியவாறு விரதம் அநுஷ்டித்து வருகையில் மூவேழு தினங்கள் சென்றன.

அதன்மேல் மற்றொருநாள் முனீசுவரரின் ஹோமப்பசு, தன்னைப் பின் தொடர்வோனுடைய S மனோபாவத்தை அறியவிரும்பி, கங்கை, மலையிலிருந்து அருவியாக விழும் இடத்திற்குச் சமீபத்தில் புற்கள் நிறைந்த ஹிமயமலைக் குகையில் நுழைந்தது. அரசன், கொடிய விலங்குகள் ஹோமப்பசுவை மனதினால் கூட நெருங்குவதற்கு எண்ணத்துணியாவென்று, நினைத்து மலைக்காட்சி யழகைப் பார்த்துக் கொண்டிருக்கையில், ஒரு சிங்கமானது அவனுக்குத் தெரியாதபடி அப்பசுவின்மேல் பாய்ந்து அதைப் பிடித்துக்கொண்டது. குகையின் எதிரொலியால் தீர்க்கமான அப்பசுவின் கதறலானது, துயரப்படுவோரிட மிரங்கும்சுபாவ முள்ளன மன்னவன் இமயமலையில் செலுத்திய கண்ணைக் கடிவாளத்தினால் பிடித்திழுத்தது போலத் திருப்பிற்று. கையில் வில்லையுடைய அவ்வரசன் சிவப்பு நிறமுள்ள பசுவின்மேல் உட்கார்ந்திருக்கும் சிங்கத்தைப் பார்த்தான். அது ஒருமலையில் நச்சங்குப்பொடிகள் நிறைந்த சமபூமியில் ஒரு வெள்ள லொத்திமரம் புஷ்பித்ததுபோ லிருந்தது. சரணமடைந்தவர்களைக் காப்பவனும், தன் பகைவர்களைத் தனது வல்லமையால் நாசஞ்செய்வோனும், சிங்கநடை பொருந்தியவனுமான

* புஜபலம் = கைவன்மை; † இரக்ஷகன் = காப்பவன்; S மனோபாவம் = கருத்து.

அரசன் கோபமடைந்து, கொல்லப் படத்தக்கதான சிங்கத்தை வதைப்பதற்காகத் தன் அம்பறாத் தூணியிலிருந்து ஒரு அம்பை எடுப்பதற்கு விரும்பினான்.

அப்பொழுது பகைவரை அடிப்பவனாகிய அரசனது கை விரல்கள் நககாந்திகளால் அலங்கரிக்கப்பெற்ற கழுகிறகுகள் பூண்ட அம்பின் * குதையில் ஒட்டிக்கொண்டன. அப்பொழுது அக்கை, ஒரு அம்பறாத்தூணியிலிருந்து இழுக்கப்போகும் பாவனைகாட்டி யெழுதப்பட்டிருக்கும் ஒரு படத்திலுள்ள கையைப்போல் அசைவற்றதாய் நின்றது. கை இப்படி அசைவற்றதாய்ச் செய்யப்பட்டதினால் மிகுந்த கோபமுடைய அரசன், மந்திரம் † ஓஷதி இவைகளால் வீரியமற்றுச் சீறிக்கொண்டிருக்கும் பாம்பைப்போல, தன்னருகிலுள்ள குற்றஞ் செய்த வஸ்துவைத்தொட வல்லமையற்ற கோபாக்கினியால் தனக்குள்தானே சாய்ந்து கொண்டிருந்தான். பின்பு அச்சிங்கம் பெரியோரால் மதிக்கப்பட்டவனும் மநுகுலத்துக்கு ‡ துவஜம் போன்றவனும், சிங்கத்தின் வலிமை கொண்டவனும், தன்னுடைய § ஸ்திதியைக்கண்டு திகைத்துப் போயிருக்கிறவனுமான அரசனைப் பார்த்து, அவனுக்கு ஆச்சரியமுண்டாகும்படி மனிதபாஷையில் பின்வருமாறு சொல்லிற்று:—

“ஏ, பூபாலனே! வீணே சிரமப்படாதே; நீ ‖ அஸ்திரத்தை என்பேரில் பிரயோகித்தாலும் அது விருதாவாகப் போய்விடும். மரத்தை வேரோடு பிடுங்கும் காற்றின் வேகமானது கற்பாறையிடம் பலிக்கிறதில்லை. சிவபெருமான் கைலாஸத்தைப் போன்ற வெண்மை பொருந்திய விருஷபத்தின் மேலேறும்பொழுது, அடிவைத்தருளுவதால் பரிசுத்தமான முதுகைப்பெற்றவனாகிய நான், அந்தச் சிவபெருமானுடைய கும்போதரன் எனப்பெயர் வாய்ந்த ஊழியனென்றும், நிகும்பனுடைய நண்பனென்றும் நீ அறி! (எதிரிலிருந்த ஒரு மரத்தைக்காட்டி) இதோ உன் கண்ணுக்கெதிரில் ¶ தேவதாருக் கன்றைப் பார்க்கிறாயல்லவா? விருஷபக் கொடியையுடைய சிவபெருமான் இதைத் தன் குழந்தையைப்போல் பாலிக்கின்றார். இது $ ஸ்கந்தர் தாயாரால் குடங்களினின்றும் வார்க்கப்பட்டதும், பிள்ளைப்பாலைப் போன்றதுமான ஜலத்தின் ருசியை அறிந்திருக்கிறது.

“ஒரு சமயம் ஒரு காட்டானை, தினவைப் போக்கிக் கொள்வதற்காகத் தன் கன்னத்தை இதில் உராய்ந்து கொள்ளவே, இதன் பட்டை எடுபட்டுப் போய்விட்டது. அதைக்கண்டு பார்வத புத்திரியானவள், முருகர் அஸுரர்களுடைய அஸ்திரங்களால் காயப்படுத்

---

* குதை = அடிப்புறம்; † ஓஷதி = சிறந்த பச்சிலை; ‡ துவஜம் = கொடி; § ஸ்திதி = இருப்பு.

‖ அஸ்திரம் = அம்பு, கைவிடுபடை, ¶ தேவதாரு = செம்புளிச்சைமரம் $ ஸ்கந்தர் = முருகர்;

தப்பட்டால் எப்படி வருந்துவாளோ அப்படி வருந்துகிறாள். அது முகற்கொண்டே காட்டானைகளைப் பயமுறுத்தி விரட்டுவதற்காகச் * சூலபாணியால் நான் ஒரு சிங்கமாக மாற்றப்பட்டு இந்தக் குகையில் இருக்கப் பட்டிருக்கிறேன். என்னிடம் வந்து சேரும் பிராணிகளே எனக்கு ஆகாரமாக ஏற்படுத்தப்பட்டன. பசி மிகுந்திருக்கும் எனக்கு ஈசனால் காலமறிந்து அனுப்பப்பட்டு வந்திருக்கும் இந்த இரத்தம் நிறைந்த பாரணையா (பசுவா)னது, இராகுவுக்குச் சந்திரனிடமுள்ள அமிர்தத்தைப்போல எனக்குப் போதுமானது. ஆகையால் நீர் இதில் அவமானப்படாமல் திரும்பிப்போம். நீர் குருவிடம் உமக்குள்ள சிஷ்ய பக்தியைக் காட்டிவிட்டீர்; பாதுகாப்பதற்கு ஒப்புவிக்கப்பட்ட ஒரு வஸ்துவை ஆயுதங்களைக் கொண்டு இரக்ஷிப்பது அசாத்தியமாகப் போய்விட்டால, அது, ஆயுதம் பிடித்தவர்களுடைய புகழுக்குக் குறைவுண்டாக்காது" என்றது சிங்கம்.

இவ்வாறு சிங்கம் சப்பீரமாகப் பேசுவதைக் கேட்டு புருஷ சிரேஷ்டனான திலீபன், சிவபெருமான் பிரபாவத்தால் அஸ்திரமெடுக்கக்கூடாமல் தான் கட்டுப்பட்டிருப்பதையறிந்து, தன்னிடம் தான் கொண்டிருந்த இகழ்ச்சியைக் கொஞ்சம் தணித்தான். இந்திரன் தன் வஜ்ஜிராயுதத்தை விட்டெறியப் போகையில் முக்கண்ணன் பார்வையால் தடுக்கப்பட்டதுபோல, இதற்குமுன் † பாணம் போடப்போகையில் விணாகிய முயற்சியையுடைய அரசன் பின்வருமாறு அதற்குப் பதில் சொன்னான்:—"ஹே மிருகேந்திரனே" கைகாலசைக்க முடியாத நான் சொல்லப்போகும் வார்த்தை நகைக்கத் தக்கதுதான். ஆனால், சகலப் பிராணிகளுடையவும் மனதிலுள்ள எண்ணத்தைத் தாம் அறியவல்லவராகையால் என் மனதிலுள்ளதை நான் சொல்லுகிறேன். உலகத்திலுள்ள ‡ ஜங்கம § ஸ்தாவர வஸ்துக்களை ஆக்கி, ரக்ஷித்து, அழிப்பவராகிய ஈசன் என்னால் வழிபடத்தக்கவர்தாம். யாகஞ் செய்கிறவரான என் குருவின் பொருளும் இதோ சாகப்போகின்றதுமான இப்பசுவும் அசட்டை செய்யத்தக்கதில்லை. ஆகையால், நீர் உம்முடைய பசியை என் தேகத்தைக் கொண்டு தீர்த்தருள வேண்டுகிறேன். அந்திப் பொழுதில தன் இளங்கன்றைப் போய்ப் பார்ப்பதற்கு ஆத்திரங்கொண்டிருக்கும் முனீசுவரருடைய இப்பசுவை விடுதலை செய்யவேண்டும்." என்றான் அரசன்.

பின்பு பரமசிவனின் சேவகனாகிய அச்சிங்கம், தனது பற்களின் காந்தியால் மலைக்குகைகளிலிருக்கும் இருளை நீக்கிக்கொண்டு புன்னகையுடன் அரசனைப்பார்த்து மறுபடியும் கீழ்க்கண்டவாறு சொல்லிற்று:—

---

* சூலபாணி = சிவபெருமான்.

† பாணம் = வில். ‡ ஜங்கமம் = அசையும்பொருள். § ஸ்தாவரம் = அசையாப்பொருள்.

"ஏ, அரசனே! ஒன்றான வெண்குடையையும், உலகத்திற்குத் தலைவனாயிருப்பதையும், புதிய யௌவனத்தையும், இனிய இச்சரீரத்தையும் இன்னும் பலவற்றையும் அற்பமான பசுவிற்காக விட விரும்பும் நீர் யோசித்துப் பார்க்கும்பொழுது முழுமூடராயிருக்கிறீரென்பது எனக்குத் தோன்றுகிறது. குடிகளுக்குத் தலைவரே! நீர் இப்பசுவிடம் கருணைகொண்டு உமது சரீரத்தைக் கொடுத்துவிட்டால், பிறகு இப்பசு ஒன்றே பிழைத்திருக்கும். நீர் உயிரோடிருந்தால், தந்தைபோல, எப்பொழுதும் * பிரஜைகளை ஆபத்துக்களினின்றும் காப்பாற்றுவீர். நீர் ஒரேபசுவை யுடையவரும், பசுவைக் காப்பாற்றாமையால் கோபம் மிகத்தக்கவரும், அக்கினியைப் போன்றவருமான குருவுக்கு பயப்படுகின்றீரா? அவ்வாறாயின், நீர்குடம்போன்ற மடியையுடைய பசுக்களைக் கோடிக்கணக்காகக் கொடுத்து குருவினுடைய கோபத்தை நீக்கிவிடலாமே! ஆகையால் † கல்யாண பரம்பரைகளை அநுபவிக்கக் கூடியதும், பலத்தோடு கூடியதுமான உமது சரீரத்தை நீர் காப்பாற்றிக்கொள்ளும். ஏனெனில், சகல வஸ்துக்களாலும் நிறைந்த இராஜ்யம், பூதல சம்பந்தத்தினால் மட்டும் வேற்றுமையுள்ள ஸ்வர்க்கலோகமாகும்." என்றது.

இவ்வாறு மிருகேந்திரன் சொல்லி நிறுத்தியதும், மலையும், அன்பினால் இவ்விஷயத்தைக் குகைகளிலுண்டான எதிரொலி மூலமாக அரசனுக்குத் தெரிவித்தது. சிங்கம் உட்கார்ந்திருப்பதனால் நடுங்கும் கண்களையுடைய பசு, மிகுந்த கருணையுள்ள மன்னவனைப் பார்த்தது. பின்பு சிங்கத்தின் வார்த்தையைக் கேட்ட வேந்தன் மீண்டும் கீழ்கண்டவாறு பதில் சொல்லலானான்:—

"ஏ மிருகேந்திரனே! அரசன் எதையும் நாசத்திலிருந்து காப்பதால் அவனுக்கு க்ஷத்திரியன் என்னும பதம் உலகில் பிரசித்தமாயுள்ளது. அவ்வாறு துன்பமுற்ற பிராணியைக் காப்பாற்றாதவனாகிய எனக்கு ராஜ்யத்தினால் பயனென்ன? நிந்தையினால் மாசு பொருந்திய பிராணனால்தான் யாதுபயன்? வேறு பசுக்களைக் கொடுத்து முனிவரின் கோபத்தைக் குறைப்பது எவ்வாறு இயலும்? இப்பசு காமதேனுவுக்குக் குறைந்ததில்லை யென்பதை நீர் அறிவீராக; இதன்மேல் நீர் பாய்ந்தது சிவபெருமானின் வல்லமையினாலேயேயாகும். இப்பசுவை என் சரீரத்திற்குப் பதிலாக உம்மிடமிருந்து விடுதலை செய்வது நியாயமானதே; இவ்வாறு செய்வதனால் உமது பாரணை (உணவு)ம் பூர்த்தியாகின்றது; ஹோமத் திரவியங்களைக் கொடுக்கும் முனிவரின பசுவும் பிழைத்துப் போகின்றது. நீர் தேவதாரு மரத்தை மிக முயற்சியோடு காப்பாற்றுகிறீர்; சேவகன், காப்பாற்றுமாறு தன்னிடம் எஜமானால் ஒப்புவிக்கப்பட்ட வஸ்துவைப் பலி கொடுத்துவிட்டுத் தான் காயம் படாமல் தலைவன் முன்னிலையில் போய் நிற்பது முடியாத காரியமென்பதைத் தலைவனுக்

* பிரஜைகள் = குடிகள்; † கல்யாண பரம்பரை = சுப காரியக்கூட்டம்.

குக் கீழ்ப்படியும் நீர் அறிவீர். உமக்கு என்னைக் கொல்வதில் விருப்ப மில்லாவிடில், எனது புகழுடம்பில் கருணை கொள்ள வேண்டுகிறேன். என்னைப் போன்றவர்கள் அவசியம் அழியக் கூடியதும், * பஞ்சபூதவிகாரமாயுள்ளதுமான சரீரபிண்டத்தில் ஆசையில்லாதவர்களன்றோ? உரையாடுவதே நட்புக்குக் காரணமென்றனர் ஆன்றோர்; அத்தகைய சம்பந்தம் நடுக்காட்டில் சேர்ந்த நமக்கு ஏற்பட்டது. ஆகையால், ஹே பூதநாதன் சேவகனே! நீர் நண்பனாகிய எனது கோரிக்கையைத் தள்ளிவிடக் கூடாது." என்றான் அரசன்.

உடனே சிங்கம் "அவ்வாறே சரி" யென்று பசுவை விட்டுவிட்டது. பிரதிபந்தத்திலிருந்து விடுதலைபெற்ற திலீபன், அப்பொழுதே ஆயுதங்களை விட்டுவிட்டுத் தனது தேகத்தை † மாம்ஸபிண்டத்தைப்போல, அச்சிங்கத்திற்கு அர்ப்பணம் செய்தான். அப்பொழுது சிங்கம் தன்பேரில் வேகமாய்ப் பாயப்போவதை எதிர்பார்த்துக்கொண்டு தலை குனிந்து நிற்கும் மன்னவன் மீது ‡ வித்தியாதரர்கள் கைகளால் வாரியிரைத்த மலர்கள் வீழ்ந்தன. அரசன், "குழந்தாய்! எழுந்திரு!" என்ற அமிர்தம் போன்றவார்த்தையைக் கேட்டதும் எழுந்து, தனது முன்பு தாயைப்போன்றதும், பாலைப் பெருக விடுகின்றதுமான பசுவைப் பார்த்தானேயன்றிச் சிங்கத்தைக் காணவில்லை.

பின்பு அப்பசு, ஆச்சரியமுற்ற திலீபனைப் பார்த்து, "உத்தம புருஷா! நானே மாயா சக்தியால் சிங்கத்தை வரவழைத்து உன்னைப் பரீக்ஷித்தேன்; முனிவருடைய மகிமையினால் யமனும் என்னை அடிப்பதற்கு வல்லவனாகான்; அங்ஙனமிருப்ப, மற்றைய துஷ்டப் பிராணிகள் என்னைக் கொல்வது எவ்வாறு இயலும்? குழந்தாய்! நீ குருவிடம் வைத்திருக்கும் பக்தியாலும் என்னிடம் வைத்திருக்கும் கருணையாலும் நான் உன்னிடம் திருப்தியடைந்தேன். உனக்கு வேண்டும் வரம்யாது? நான் பாலைமட்டும் கொடுக்கும் பசுவல்லவென்பதையும் நான் திருப்தியடைந்தால் சகல விருப்பங்களையும் நிறைவேற்றுவேனென்பதையும் அறி" என்று சொல்லிற்று.

பின்னர் இரவலரை மகிழ்வித்தவனும், தனது புஜபராக்கிரமத்தினால்—'சுத்தவீரன்' என்ற பெயரைப் பெற்றவனுமான அரசன், கை கூப்பிக்கொண்டு, வம்சத்தை விருத்திசெய்யக் கூடியவனும், ஸ்திரமான புகழையுடையவனுமான ஓர் புதல்வன் ஸுதக்ஷிணையிடம் உண்டாகும்படி அநுக்கிரகித் தருளுமாறு அதனை வேண்டிக் கொண்டான். உடனே அப்பசு, மக்கட்பேற்றை விரும்பும் அரசனுக்கு, விரும்பிய வரத்தைக் கொடுத்துவிட்டு, "குழந்தாய் நீ எனது பாலை ஒரு தொன்னையில் கறந்து குடி!" என்று கட்டளையிட்டது.

---

* பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பவை பஞ்ச பூதங்களாம். † மாம்ஸபிண்டம் = மாமிச வுருண்டை; ‡ வித்தியாதரர்கள் = ஒருவகை மேலுலகத்தார்கள்.

அதற்கு வேந்தன், "தாயே! கன்றுக்கு ஊட்டப்பட்டும் ஹோமாதி அநுஷ்டானங்களுக்கு உபயோகப்பட்டும் எஞ்சிய உமது பாலை, நான் பரிபாலிக்கும் பூமியின் கப்பணத்தைப்போல, முனிவருடைய அநுமதி பெற்றபின் குடிக்க விரும்புகின்றேன்." என்று சொன்னான்.

இவ்வாறு இறைவன் சொன்னதைக் கேட்ட பசு, மிகவும் திருப்தியடைந்தது. உடனே திலீபனோடு இமயமலையின் குகையிலிருந்து ஆசிரமத்திற்குச் சிரமமின்றியே வந்து சேர்ந்தது. தெளிந்த சந்திரன் போன்ற முகத்தையுடைய திலீபன், சந்தோஷக்குறிகளால் ஊகிக்கப்பட்டதான தேனுவின் அநுக்கிரகத்தை இரண்டாமுறை சொல்வது (கூறியது கூறல்) போன்ற வார்த்தைகளால் குருவிடம் தெரிவித்துப் பிறகு மனைவியிடம் சொன்னான். எவராலும் இகழப்படாதவனும், நலமோரிடம் அன்புள்ளவனுமான திலீபன், குருவின் அநுமதிபெற்று, கன்றுக்கு ஊட்டியும் ஹோமத்திற்கு உபயோகப்படுத்தியும் மிஞ்சிய அப்பசுவின்பாலை, வெளுத்தும் உருவெடுத்துமுள்ள புகழைப்போல, மிகுந்த தாகத்தோடு குடித்தான்.

இந்திரியங்களை வென்ற வசிஷ்ட முனிவர், முற்கூறிய விரதத்தின் பாரணை முடிந்த பிறகு திலீபனும் அவன் மனைவியும் பிரயாணஞ் செய்கையில் சொல்லத்தகுந்த ஆசீர்வாதங்களை அவர்க்குக் கூறிவிட்டு, அத்தம்பதிகளை அவர்களுடைய பட்டணத்திற்கு அனுப்பினார். திலீபன், திருப்தி செய்விக்கப்பட்ட அக்கினியையும் வசிஷ்டரையும் பிறகு அருந்ததியையும் கன்றோடு கூடிய பசுவையும் பிரதக்ஷிணஞ் செய்துவிட்டு, நல்லொழுக்கங்களால் மிகுந்த பிரதாபமுள்ளவனாய்ப் பிரயாணப்பட்டான். பொறுமையுள்ள திலீபனும் ஸுதக்ஷிணையும் செவிகளுக்கு இன்பமாக சப்திக்கின்றதும், இன்பமளிக்கின்றதுமான தேரின்மேலேறிச் செவிகளுக்கு இன்பமான சிரவணத்தையுடையதும், தடையில்லாமல் இன்பமளிக்கின்றதும், பயனடைந்ததுமான தமது மனோரதத்தினைமேல களிப்புற்றுச் சென்றார்கள்.

அரசன் நகரத்திற்கு வந்ததும் பிரஜைகள், வெளியிற் சென்றிருந்தமையால் ஆசையை யுண்டாக்கியவனும், மக்கட்பேற்றைக் குறித்த விரதத்தால் இளைத்த சரீரமுள்ளவனும், புதிதாய் வந்தவனுமான அவ்வரசனை, குறைவால் ஆசையையுண்டு பண்ணுகின்றவனும், உலக க்ஷேமத்தைக் குறித்த விரதத்தால் குறைந்த சரீரமுள்ளவனும், புதிதாய் உதயமடைந்தவனுமான சந்திரனைப் போலப் பார்த்துப் பார்த்து ஒழிவடையவில்லை. இந்திர ஸம்பத்தையுடைய திலீபன், பிரஜைகளால் கொண்டாடப் பட்டவனாய் உயர்ந்த கொடிகளையுடைய பட்டணத்தில் பிரவேசித்து, ஆதிசேஷனுக்குச்

சமமான பலமுடைய தனது *புஜத்தில் மறுபடியும் பூமியின் †பாரத்தை ஸ்தாபித்தான்.

அப்பால் ஆகாயமார்க்கம், அத்திரி முனிவரின் கண்களிலிருந்து உண்டான தேஜஸ்ஸை (சந்திரனை)ப் பெற்றதுபோலவும், ஆகாசகங்கை, அக்னியால் போடப்பட்டதும், தெய்வத்தன்மையுள்ளதுமான தேஜஸ்ஸை (முருகனை)ப் பெற்றதுபோலவும், ஸுதக்ஷிணை, திலீபனது குலம் அபிவிருத்தியடைவதற்காக, மஹான்களான திக்பாலர்களின் தேஜஸ்ஸோடு கூடின கருப்பத்தைத் தரித்தாள்.

இரண்டாவது ஸர்க்கம் முடிந்தது

(தொடரும்)

By: M. M. Narayanasawmy Aiyer,
Mudikondam.

𑌶𑍍𑌰𑍀𑌜𑌿𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍋𑌤𑍍𑌤𑌰 𑌮𑌾𑌣𑌿𑌕𑍍𑌯𑌮𑌾𑌲𑌾

ப்ரஸ்னேத்தர மாணிக்யமாலா

𑍐 𑌨𑌮𑌃 𑌶𑍍𑌰𑍀𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌦𑍋𑌷𑌾𑌦𑌿 𑌨𑌾𑌶𑌿𑌨𑍇
𑌪𑌞𑍍𑌚𑌕𑌲𑍍𑌯𑌾𑌣 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌷𑍍𑌟𑌕 𑌹𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 𑌚

நம: ஸ்ரீவீதராகாய சர்வதோஷாதி நாசினே
பஞ்ச கல்யாண யுக்தாய கர்மாஷ்டக ஹந்த்ரேச

(இதன் பொருள்.) எல்லா கர்மங்களை கொளுத்தபட்டவராயும் சர்வதோஷ ரஹிதராயும். இன்னும் கர்ப்ப கல்யாண முதலான பஞ்ச கல்யாணத்தை யுடைய ஸ்ரீ வீதராகனை நமஸ்கரிக்கிறேன்.

2. 𑌅𑌰𑍍𑌹𑌨𑍍𑌤𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌪𑌾𑌠𑌕𑌂 𑌤𑌥𑌾
𑌵𑌨𑍍𑌦𑍇𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌧𑍂𑌂𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌘𑍍𑌨𑌂 𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑌾𑌕𑌰𑌮𑍍

அர்கந்தம் பரமம் சித்தமாசார்யம் பாடகம் ததா
வந்தேஹம் சர்வசாதூம் ச்சகர்மக்நம் சகுணாகரம்

(இ-ள்.) குணங்களுக்கு உத்பத்தி ஸ்தானமாய் இருப்பாருய் இன்னும் கர்மங்களை நாசம் செய்திருக்கக்கூடிய அருகத் சித்தர் ஆசார்யர் உபாத்தியாயர் சர்வசாது இந்த பஞ்சபரமேஷ்டிகளை நான் நமஸ்கரிக்கிறேன்.

புஜம் = கை; பாரம் = சுமை.

3. [illegible]
[illegible]

ஸ்ரீ சாரதாம் சதாசெளமி பூதமாத்ரு பயப்ரதாம்
ஷட்கர்ம ஜலதௌநௌகாம் நருமாநதக்ரமாம்

(இ-ள்.) எல்லா பிராணிகளுக்கும் அபயத்தை கொடுக்கபட்டவளாயும் ஷட்கர்மமாகிற சமுத்தாரத்தி னின்றும் தாண்டி போவதற்கு கப்பல் போன்றவளாயும் இன்னும் மனுஷ்யர்களாலும் தேவர்க்களாலும் சதா வந்தித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீ சாஸ்வதி தேவியை நான் அடிக்கடி ஸ்தோத்திரம் செய்கிறேன்.

4. [illegible]
[illegible]

குணோபேதம் கணதீசம் ரிஷிதத்வப்ர தீபகம்
வம்சேஜாதம் வ்ரஷேசச்ய தேவதேவன் தம்ஸ்துவே

(இ-ள்.) என்பத்தி நான்கு லக்ஷம் குணங்களோடு கூடினவனையும், ரிஷிகளுடைய (தீர்த்தங்கரர்களுடைய) தத்வங்களை பிரகாசிக்கப்பட்டவராயும் இன்னும் தேவேந்திரனால் பூஜிக்கப்பட்ட ஆதி தீர்த்தங்கருடைய புத்திரரான ஸ்ரீவ்ரஷப சேனகணதரரையும் நான் ஸ்தோத்திரம் செய்கிறேன்.

5. [illegible]
[illegible]

கௌதமாத்யா முனீந்த்ராயெ தர்மதேச னதத்பரா:
தேசர்வெமேசுபம் தத்ரு: சததம் ஞானசாகரா:

(இ-ள்.) சமுத்திரமானது ஜலத்தினால் நிரம்பி இருப்பதுபோல பூர்வஞான முள்ளவராயும் தர்மோபதேசத்தில் ஆசக்தர்களாயுமிருக்கிற கௌதம முதலான எல்லா முனீஸ்வரர்கள் எனக்கு மங்களகாத்தை உண்டு பண்ணட்டும்.

6. [illegible]
[illegible]

சுதர்மம் ஜிநசேநம் சகுணபத்ரம் குணந்விதம்
அகளங்கம் சதாவந்தே பூஜ்யபாதம் முனீஸ்வரம்

(இ-ள்.) சுதர்ம, ஜிநசேன, குணபத்திர, அகளங்க, இன்னும் பூஜ்யபாத இந்த முனீஸ்வரர்களை நான் சதா நமஸ்கரிக்கிறேன்.

7. [illegible]
[illegible]

ரவிஷேணம் ப்ரபாசந்தரம் ராமசேனம் ஜிதேந்திரியம்
நமாமிசததம் பக்த்யா ஸ்ரீ பூஷண திகம்பரம்

(இ-ள்.) ரவிஷேணம் ப்ரபாசந்த்ரம், ராமசேன ஸ்ரீ பூஷண என்கிற திகம்பர முனிகளையும் பக்தியோடு எப்பொழுதும் நமஸ்கரிக்கிறேன்.

8. ശ്രീഗുരോഃ പംകജം നത്വാകൃത്വാ ശുദ്ധം മനോനിജം
കരകുട്മലമായോജ്യ ശിഷ്യഃ പൃച്ഛതി സദ്ഗുരും

ஸ்ரீ குரோஃ பங்கஜம் ந,த்வாக்ரத்வா சுத்தம் மனோநிஜம்
கரகுட்மலமாயோஜ்ய சிஷ்ய ப்ரச்சதிசத்குரும்

(இ-ள்) ஒரு சிஷ்யன் அந்தக் கரணத்தை சுத்தம்செய்து ஒரு ஸ்ரீ குருவி னுடைய ஸ்ரீ பாதங்களில் நமஸ்காரம் செய்து இரண்டு கைகளையும் ஜோடித்துக்கொண்டு அந்த சத்குருவை கேழ்ப்பதென்னவென்றால்,

ഹേസ്വാമിന്ന് സംസാരേ സാരംകിം ?

ஹேசுவாமின் சம்சாரே சாரம்கிம் ?

ஓ குருவே இந்த சம்சாரத்தில் சாரம் எது.

9. സേവിജ്ജോ അരിഹംതോ പാലിജ്ജോ ഹിംസാ ഉവജ്ജിയധമ്മോ
വംദിജ്ജോ ണിഗ്ഗംഥോ സംസാരേ ഇത്ഥേവംസാരം

சேவிஜ்ஜொ அரிகந்தோபாலிஜ்ஜொ ஹிம்சா இவஜ்ஜியொ [தம்மோ
வந்திஜ்ஜொ ணிக்கந்தோ சம்சாரே இத்யேவம் சாறம்

(இ-ள்.) அரகத் பரமேஸ்வரனுடைய சேவையை செய்வது அஹிம்சா தர் மத்தை காப்பாற்றுவது, நிக்ரந்த முனீஸ்வரர்களை நமஸ்காரம் செய் வது இந்த சம்சாரத்தில் சுகத்தை செய்யக்கூடியதுகள்.

ഹേ സ്വാമിന്. കോദേവോദേവ്യഃ சுவாமிகளே யார் சுவாமி என்றரியவேண்டும்.

10. ജിനനാഥോ ഗുണാംബോധിർഭവ സാഗര താരകഃ
ദോഷാതിഗോ മഹാജ്ഞാനി ദേവോസ്ത്യ ഹിതംകര

ஜிநாஜொ குணம்போதி பவசாகர தாரகஃ
தோஷாதிகோ மஹாஞானி தேவோமான் யோஹிதம்கற

(இ-ள்.) குணங்களுக்கு சமுத்திரம் போன்றவனே சம்சார சமுத்திரத்தில் கிடக்கிறபவ்வியபிராணிகளை தாண்டிவைப்பதற்கு சமர்த்தனே சர்வ தோஷரஹிதனே ஸ்ரீ ஜிநேஸ்வரன்போல் அனந்த ஞானமுள்ள வனே எல்லா பிராணிகளுக்கும் நன்மையை செய்பவனுயு மிருக் கிறனே அவனே தேவனென்றரிய வேண்டும்.

இன்னும் வரும்.

திரு அப்பாண்டை நயினர்,
அனந்தபுறம் ஸ்கூல் டீச்சர்
ஜாகீர் ஆரணி.

ஸ்ரீ-விசெஷ்ய-வித்யே.

ஆஹார நித்ரா பய மைதுநாநி
ஸாமாந்யமேதத் பஶுபிர் நராணாம்
ஜ்ஞாநம் நராணாம் அதிகோ விஶேஷோ
ஜ்ஞாநேந ஹீநா: பஶுபி: ஸமாநா:

ஆகாரம்-நித்திரை-பயம்-காமசேவை. இந்த நான்கும் எல்லா தேசத்திலு முண்டு. ஆனல் மனுஷ்யனிடத்தில் ஞானமே அதிகமான விசேஷம், ஞான மில்லாதவன் பசு என்றே அறியவேண்டும். இந்த ஞானமானது மனுஷ்ய ஜன்மத்தில்தான் அடைய முடியும். பூர்வ புண்ணியத்தாலேதான் மனித ஜென்மம் கிடைக்கும். மனுஷ்ய ஜென்மமெடுத்ததற்கு மேலே பிரதி ஒரு ஸ்திரீ புருஷரும் சுவிசாரத்தினல் நடக்கவேண்டும் பிரதியொரு வார்த்தையி லும் சுவிசாரம் வரவேண்டுமானல் அந்த விசாரத்தை தெரிந்துக் கொள்ளுகிற சக்தி (ஞானம்) அவனிடத்தில் இருக்கவேண்டும். இந்த சக்தியானது அவ னுடைய குணத்தின்மேல் பொருந்திருக்கிறது. இந்த ஞானமென்கிற சக்தி கிடைக்க வேண்டுமானல் வித்தையை கற்கவேண்டும். வித்தை யில்லாமல் ஞானம் உண்டாக மாட்டாது. அது எப்படி போலென்றல் தாய் இல்லா மல் குழந்தை உண்டாக மாட்டாதோ அதுபோல் ஞானத்திற்கு வித்தையே தாயா யிருக்கிறது என்பதை சகலரும் ஒப்புக்கொள்ளக்கூடும் ஆகையினலே ஞானர்ஜனே-வித்தியாப்பியாசம் முக்கியமாய் வேண்டும் வித்தையாகிற பாலை பானம் செய்வதால் பிரதி ஒருவரிடத்திலும் ஞானமென்கிற சத்தி விளைகிறது அதனல் சகலமான-ஸ்திரீ-புருஷரும் அவசியமாய் வித்யாபியாசம் செய்ய வேண்டும். வித்தையே-இந்த சப்தம்-வித-தெரி, என்கிற சம்ஸ்கிருத தாதுவி னின்றும், பிறந்திருக்கிறது மேல்படி வித்தையை மூன்று விதத்தால் சம்பா திக்க வேண்டும், அதாவது 1. சேவாவிருத்தி - வித்தையை உபதேசிக்கிற குருவின் சேவையை உத்தமரீதியினல் செய்து சம்பாதித்துக் கொள்ளக்கூடிய வித்தைக்கு சேவாவிருத்தி என்றும் 2. விநிமய தன்னிடத்தில் இருக்கக்கூடிய வித்தையை தான் கற்றுக்கொள்ளக் கூடிய வித்தைக்கு விநிமய என்றும் 3. சம்பளம் கொடுத்து திரவிய துவாரா கற்றுகொள்ளுகிற வித்தைக்கு திரவிய வித்தை என்று சொல்லுவார்கள் இந்த பிரகாரம் மூன்று விதமாக வித்தையை சம்பாதிக்கலாம்.

2. யாரிடத்தில் - திரவியம் இருப்ப தில்லையோ அவர்களுக்கு சுகமே இல்லை-பொருள் இல்லாதவன்-உபஜீவனம் செய்வது கடினமாய் இருக்கிறது-பணமில்லாதவர். ஜீவன் ம்ரதரைப்போல் காண்கிறர்கள். அதாவது (நடை பிணம்போல் காண்கிறர்கள்) தன் பிரிய சினேகிதரிடத்திலும்-பெரியோர்க ளிடத்திலும் அவனுக்கு மரியாதை கிடைக்ாது பொருளில்லாதவன் மனம் இன்னும் அநேக விதமான சிந்தையால் மலினமாய் அவருடைய முகம் எப் பொழுதும் களை குறைந்ததுபோல் காட்டும்-ஜனங்கள் அவனை எப்பொழுதும் திரஸ்கரிக்கப்படுகிறன். சாராம்சமாவது, தனமில்லாதவர்களுக்கு சம்சாரத்

தில் சுகமில்லை ஆகையால் பிரபஞ்சத்தில் தங்கள் யோக்கியானு சாரத்தை அனுசரித்து சுகத்தினாலும்-மரியாதையினாலும் இருக்க விரும்புகிறவர்கள் உண வுக்கும் உடைக்கும் நல்வழியில் பொருள் சம்பாதிக்கவேண்டும், மனை-வீடு, வாசல்-பூமி. சீமை-தனம். தானியம்-வெள்ளி. பொன் இன்னும். மாணிக் கம்-வஜ்ரம்-வைடூர்யம்-இவைகள் ஸ்தாவர.வஸ்துக்களை.சனமென்று சொல்லு கிறார்கள்-இந்த தனமுள்ளவர்களுக்கு அனேக விதமான லாபமும். சௌக்கிய மும் கிடைக்கிறது ஆனால் இவைகள் ஸ்திரமாய் இருக்ககூடியதல்ல லோகத் தில் சகல வஸ்துக்களும் நஸ்வரமாயும்-க்ஷணிகமாயு மிருக்கிறது ஆகையினாலே வித்யாவிசார முள்ளவர்கள் நாசமாகாததும்-அபார சுகத்தை கொடுக்ககூடிய தனத்தை சம்பாதிக்க பிரயத்னப் படவேண்டும். இப்பேர்ப்பட்ட நாசாஹித மான தனம் யாதென்றால் விதத்தையே.

3. ஷை வித்யாதனம் நாச ரஹிதமாயும். பூமண்டலத்தில் அஞ்ஞானமென் கிற. கோரமான இருளில் மூழ்கி இருப்பவர்களுக்கு. தினமணி சூர்யனைப் போல் பிரகாசத்தை கொடுக்கிறது. மானவிப்ராணிய சகல இந்திரியங்களில் நேத்ரேந்திரியம் சிரேஷ்டமானது மனிதர்களுக்கு. வெளி நேத்ரங்களிருந்து உள் நேத்ர மில்லாவிட்டால் பரதேசத்தில் அதிக தூரத்தில் இருக்ககூடிய வஸ்துக்களை பார்ப்பதற்கு முடிகிறதில்லை ஆகையினாலே வித்தையினால்-உள் நேத்ர பார்வையை நிர்மலம்செய்து சர்ம சக்ஷுவிர்க்கு தெரியக்கூடாத தெல் லாம். பார்ப்பதற்கு சாதனமாய் இருக்ககூடிய உள் நேத்ரம் (ஞானத்தை) அரியவேண்டும்-வித்வாம்சர்-ஜன்மாந்தர்கள் (முனிகள்) அந்தர்சக்ஷு (ஞான திருஷ்டியினால் இந்த பிரபஞ்சமெல்லாம் பார்த்து சந்தோஷப் படுகிறார்கள். ஒவ்வொருவரும், தாங்கள் சாப்பிடுவதற்குமேல். ஒரு பிடி அதிகமான ஆகாரம் சாப்பிட்டால் வயிரானது ஜடமாகி அஜீர்ணமாகிறது இன்னும் தங்கள் திரே கத்தின்பேரில்-முத்தாபரணங்களாகட்டும், சொர்ணாபரணங்களாகட்டும் அணிந் துக்கொண்டால்-ஒருவேளை பாரமாக காணலாம். ஆனால் எவ்வளவு வேண்டிய மட்டும். வித்தையாகிற ஆபரணத்தை போட்டுக் கொண்டால் (வித்தையை கற் றால்) அது பாரமாகிறதில்லை இன்னும் கள்ளர் பயமில்லை-ராஜாக்கள் பய மில்லை சுமந்துக்கொண்டு நடந்தால் பாரம் தோன்றுவதில்லை பிரபஞ்சத்தின் நகைபொருள் வகையறாக்களில் அண்ணன் தம்பி பாகம் கேழ்ப்பதுபோல் வித்தையில் பாகம் கேழ்ப்பார்களென்கிற பயமில்லை.

4. நாம் வித்வன் மணிகளென்று சும்மா பெரிய பெரிய கிரந்தகளை பார்த் தால் வீத்தையை தெரிந்தவன்போல் எண்ணுவதர்க்கில்லை அது வியாகதமே சரி இதற்காக ஒரு ஞானியின் அபிப்பிராயம் அர்த்தகதின் மர்மம் அறியாதது வியர்த்தம். தான் கற்றாலென்ன பதபத்தியங்களில் விடுகிறது. எத்தி தாழ்த்து வது. தா. ஒத்து. ச. ஒத்து. இதன் முறைமை தெரியாமல் கற்பதனால் என்ன பலன் உண்டாகிறது. கழுதை முத்துரத்னங்களை சுமந்துக் கொண்டாலும் அதை யாராவது குதிரை என்று சொல்லுவார்களோ வித்வாம்சர்கள் எழுதி வைத்திருக்கிற கிரந்தங்களில் இருக்கக்கூடிய சுலோகங்களையும் வாக்கியங்களை யும் முகப்பாடம் செய்தால் தாங்கள் வித்வாம்சர்களாவார்களோ, இது களெல்

லாம் அல்ல உத்திரவு கிடைக்ககூடிய அர்த்தம் தெரியாமல் கஷ்டப்படுவது மூர்க்கத்தனம் வித்யாவந்தர்களுடைய மனது சாந்தமாயிருப்பதால் அவர் சதா சுகத்திலிருக்கிறார்கள். எவ்வளவு கடின பிரசங்கம் வந்தாலும் அவர்கள் மனதுக்கு சந்தாபமாவது கிலேசமாவது உண்டாவதில்லை. சுவாசனையில்லாத முருக்கம் பூவை எப்படி வாசனையுள்ள புஷ்பத்தில் சேர்ப்பதில்லையோ. அதைப் போல் வித்தை இல்லாதவர் வித்வாம்சருடைய சபையில் சேர்ப்பதில்லை ஆகையால் வித்தியாம் சதத்தை பிரதியொரு ஸ்திரீ-புருஷரும் சம்பாதிக்க பிரயத்தனப் படவேண்டும்.

5. வித்தையை. பால்யத்திலேயே. யோக்கியமான குருவினால் ஒவ்வொரு ஸ்திரீ. புருஷரும் சம்பாதிக்கவேண்டும் ஏனென்றால் மனுஷ்ய பிராணி சகவாசத்திர்க்கு சத்சங்கம் முக்கியமானது அது எப்படி என்றால் ஜலத்தில் பாலை கலந்தால் பாலின் ரூபமே காண்பிக்கும். கரியில் பாலைகலந்தால் கருப்பு வர்ணமாக காண்பிக்கும் அதுபோல மனுஷ்ய சகவாசத்துக்கு அனுகுணமாய் கெட்ட குணங்கள் சேருகின்றன விசேஷமாய், பாலகர் பாலகியர்-மனது வெண்மை வஸ்திரம்போல் நிர்மலமாயும் இளம் முழுங்கல் துளிர்போல மிருதுவாய் இருக்கும் வெள்ளை வஸ்திரத்தின்மேல் எந்தசாயம் போட்டபோதிலும் அது நன்றாய் பிடித்துக் கொள்ளுகிறது இளம் முழுங்கல் துளிர்போல் வீரியமாய் வரும் ஆகையினாலே பால்யத்தின் அப்பியாசம் செய்த கூடபிறந்தபுத்தி சாகும் வரையில் விடாது.

இன்னும் தொடரும்.

மேல்படி சங்கதிகள்-தக்ஷிண மஹாராஷ்டா ஜைனசபை. ஸ்ரீ ஜிநவிஜய மாச பத்திரிகையிலிருந்து எழுதப்பட்டது.

சபாஜ சேவகன்,

விருதூர். திரு. அப்பாண்டை.

நாவல்.

இரகஸ்யபுரி மர்மம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6,| சஞ்சிகை-3, பக்கம் 72)

மேற்கூறிய சம்பவம் நடக்கும் சமயம் அம்புஜவல்லிக்கு வயது இருபத்தைந்து. அநங்கனுக்கு வயது ஐம்பது. ஷெ சம்பவம் நடப்

பதற்குச் சில தினங்கட்கு முன் ஒரு நாள் அநங்கன் அம்புஜவல்லியைத் தனிமையா யழைத்து "குழந்தாய்! அம்புஜம்! உன் தந்தையார் இப்பூவுலகை விட்டு நீங்கிய சமயம் உனக்குத் தெரியுமோ" என்று வினவிக் கண்களினின்றும் கண்ணீரைத் தாரை தாரையாக வடித்தான்.

அம்புஜம்:—தந்தாய்! ஏது இவ்வளவு தூரம் துக்கப்படுகிறீர்கள். நான் இதுவரை உம்மைத்தவிர வேறு தந்தை எனக்கு இருப்பதாக அறிந்திலேன். என் தந்தையே! அப்படி ஏதாவது உண்டோ? ஆனால் நீர் உண்மையாக எனது தந்தையல்லவோ?

அநங்கன்:—கண்ணே! எப்படிச் சொல்வேன். உன் தந்தையரும் எனது எஜமானருமாகிய தனபாலர் இப்பொழுது நீ காண்கிற இம்மாளிகைக்கும் இதைச் சுற்றிலுமுள்ள நிலங்களுக்குஞ் சொந்தக்காரர். மிகவும் யோக்யர். அம்மா! உனது தந்தை யிறப்பதற்கு முன்னமே உனது தாயார் இறந்து விட்டார்கள். உன் தந்தையர் இறக்கும்பொழுது எனக்கு, உன்னை அன்பாயாதரித்து வரும்படி கட்டளையிட்டார். ஐயோ! பாவம் எவ்வாறு மனம்பதைத்தார். அந்த ஜெகதீசன்தா னறிவர். அம்மா! உனக்கு என் பார்வையில் ஏதாவது குறை நேர்ந்ததோ? அப்படி யேதாவது யானறியாமல் நேர்ந்திருந்தால் மன்னிக்க வேண்டுகிறேன்.

அம்புஜம்:—தந்தாய்!—என்னைக் குழந்தைப் பருவமுதல் எடுத்து வளர்த்து அன்பா யாதரித்துவந்த உம்மை இன்னும் யான் தந்தையென்று அழைப்பதில் யாதொரு குற்றமும் இல்லை—நங்களது பார்வையில் தந்தையினிடத்தி லிருந்தால நான் எவ்வளவு சுகமடைவேனோ அதைவிடப் பதின்மடங்கு இன்புற்று வாழ்கிறேன். இதற்கு நான் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

அநங்கன்:—ஆனால் பெண்ணே! இன்னும் உன்னிடத்தில் யான் ஒன்று சொல்லவேண்டி யிருக்கிறது. (தனது சட்டைப்பையிலிருந்து தனபாலர் கொடுத்த லிகிதத்தை யெடுத்து அம்புஜவல்லி கையில் கொடுத்து) இந்த லிகிதத்தை உன் தந்தையார் உன்னிடத்தில், உனக்குப் பிராயம் வந்தபிற்பாடு கொடுக்கும்படி என்னிடம் ஈந்தனர். அதன் சாராம்சத்தை இதுவரை நான் அறிந்திலேன். அவரும் என்னிடத்தில் சொல்லவில்லை.

அம்புஜம் அநங்கன் கொடுத்த கவரை உடைத்தாள். அதில் தனக்கு ஒருலிகிதமும், மற்றொரு கவரும் இருக்கக்கண்டாள். தனக்கு எழுதிய லெட்டரில் பின்வருமாறு வரைந்திருந்தது:

"அன்பார்ந்த அம்புஜம்! இத்துடன் மகா-ா-ா-ஸ்ரீ லம்பர் துரை யவர்களுக்கு ஓர் லிகிதம் வைத்திருக்கிறேன். அவர் சென்னைப்பட்டணம் ட்ரிப்ளிகேனில் பெரிய கடையொன்று வைத்துக் கொண்டிருக்கிறார். அவரிடத்தில் நீ இக்கவரைக் கொண்டுபோய்க் கொடுத்தால் சுகம் பெறுவாய்—தனபாலர்."

கனவான்களே! அம்புஜம் பண்டைக்காலத்துக் கர்நாடகப் பேர் வழிகளைப்போல படிக்கத்தெரியாதவளல்ல வாதலால் அந்த லெட்டரிலுள்ளவற்றை யறிந்துகொண்டாள். பின்பு அதை அநங்கனுக்கும் எடுத்துரைத்தாள்.

நேயர்காள்! இச்சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான விஷயம். இவள் எடுத்துரைத்தவற்றை யெல்லாம் அடுத்த அறையில் ஏதோ ஓர் காரியார்த்தமாக வந்த பாணன் என்னும் தனபாலரது கணக்கன் உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான் என்பது நமது கதையை வாசிக்கும் நண்பர்கள் மனதில் நன்றாய்ப் பதிந்திருக்க வேண்டும்.

உடனே அநங்கனும் நமது அம்புஜமும் மறுநாட் காலையில் சென்னைக்குப் புறப்படுவதாகத் தீர்மானித்துச் சென்றார்கள். மறுநாள் உத்தேசித்தபடியே புறப்பட்டார்கள். வழியில் அநங்கனுக்கேற்பட்ட சில அசந்தர்ப்பங்களினால் வழியில் நாம் முன்பு அம்புஜவல்லியைப் பார்த்த அநகவநீத கிருஷ்ணபுரத்தில் வந்து தங்கினார்கள். பின் நடந்தவற்றை முற்கூறியுள்ளோம்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

P. N. Sankaranarayanayyar,
Son of
P. S. Narayanaswami Ayyar Avl.,
Pananjady.

21045

அழகுள்ளவை! ... விலை சகாயம்!!

இமிடேஷன் புது மாதிரியான துப்பட்டாக்கள்.

இந்த துப்பட்டாக்கள் நல்ல பட்டு நூலினால் நெசவுசெய்யப் பட்டுள்ள குலாபி, பச்சை, புளூ, வெள்ளை 5 முழ நீளம் மூன்று முழ அகலம் உள்ளவை. துப்பட்டா 1-க்கு ரூ. 3 12 0

ஆதிலட்சுமி சில்க் அவுஸ்,
பாலகிருஷ்ணன் லேன், ஜி. டி. சென்னை.

தருமசீலன் பிரஸ் விளம்பரம்.

நமது தருமசீலன் அச்சுக்கூடத்தில் தமிழிலும், இங்கிலீஷி லும், சகாயமான சார்ஜில் அச்சுவேலைகள் வெகுசுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். வெளியூரிலிருந்து, நம் ஆபீஸில் அச்சுவேலைகள் செய்துகொள்ளப் பிரியமுள்ளவர்கள், அச்சிடவேண்டியகாப்பிகளை நமக்கனுப்பி, பாரம் ஒன்றுக்கு ஒருரூபா விகிதம் புரூப் சார்ஜூம் கொடுத்தால் அவ்வேலைகளை நாமே புரூப்பார்த்து முடித்துக்கொடுப் போம்.

மானேஜர்,
தருமசீலன் பிரஸ்,
½ பாலகிருஷ்ணன் சந்து,
ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

இனாம்! "கிலாபத்" இனாம்!! இனாம்!!

இஸ்லாம் மார்க்க உண்மைகளையும் ராஜீய தேசிய விஷயங்களை யும் தன்னுட்கொண்டு, ராயல் 8-பக்கங்கொண்ட பெரிய சைஸில் ஒவ்வொரு சஞ்சிகையும் 48-பக்கங்களுடன் நல்ல உயர்தர கிளேஸ் காகிதத்தில் மிக நேர்த்தியாகச் செந்தமிழில் அச்சிடப்பட்டு ஒவ் வொரு மாதம் முதல் தேதியிலும் வெளியாகும் "தாருல் இஸ்லாம்" என்னும் மாதப் பத்திரிகைக்கு 1923-ல் சந்தாதாரராகச் சேரும் ஒவ்வொரு புதிய நண்பருக்கும் ஒவ்வொரு கிலாபத் புத்தகம் இனா மாகக் கொடுக்கப்படும். கொஞ்சம் பிரதிகளேயிருக்கின்றன. முந் துங்கள்! முந்துங்கள்.

வருஷ சந்தா ரூ 3-0-0. அயல்நாடுகளுக்கு ரூ 4-0-0

"தத்துவ இஸ்லாம்" நான்காம் கமலம் 480-பக்கங் கொண்ட பைண்டு புத்தகம் விலை ரூ. 3—0—0.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,
16, 17. லக்கின்டுலேன்பீச், மதுராஸ்.

சுகானந்த

அயத்தங்க திராவகம்.

அனுபவமானது! பிரசித்தி பெற்றது!! சஞ்சீவி போன்றது!!!

இதன் முக்கிய குணங்களாவன:—

இது வாக்கையும் ஆகையையும் பலப்படுத்தும். துர்ப்பலப்பட்டவர்களின் தோழனும் ஊன்றுகோலுமாம். பலம் குறைந்து ஆதரவற்றவர்களுக்கு அன்பான நண்பன். நவரத்தினங்களைப்போல் உபயோகப்படும் அருமையான நவநீதம். இரைப்பை, ஈரல், தலைமூளை, நீர்ப்பை ஆகியவைகளைப் பலப்படுத்தி, அவைகளைச் சீர்ப்படுத்தி உற்சாகப் படுத்தும் அற்புத ஔஷதம். இது பெரும்பான்மையும் இரத்தத்தை உண்டாக்கி, அதனை விருத்தி செய்வதில் மிகவும் சிறந்தது. இரத்த மில்லாமல் தேகத்தை வெண்மை நிறமாக்குகின்ற பாண்டு சோகை, காமாலை, சுரக்கட்டி, முதலிய ரோகங்களைக் குணப்படுத்துவதில் இது முதன்மை பெற்றது. சில செந்தூரங்கள், பஸ்பங்கள், சூரணங்கள் முதலியவைகள் இரைப்பை, சிறுகுடல் ஆகியவைகளில் தங்கி நின்று அவைகளைக் கெடுப்பதுபோல் கெடுக்காமல் அங்கு சென்ற க்ஷணமே சீரணமாகி அங்குள்ள தோஷத்தை நீக்குவதில் இது பெயர் பெற்றது. இது சித்தர் மூலிகைகளின் சத்துக்கள் சம்பந்தமாகச் செய்யப்படுவதால் அதிக உன்னதமானது. தளர்ந்த நரம்புகளைப் பலப்படுத்தி உற்சாகத்தைக் கொடுத்து முறுக்கேற்றி ஸ்திரப்படுத்தும் அற்புத சஞ்சீவியிது. இது அதிமூத்திர ரோகத்தை அறவே நீக்கும். நாள்பட்ட பேதிகளை கிரமேணுவாகக் கட்டுப்படுத்திச் சுபாவபலத்தை யுண்டாக்கும். இது நடப்பதாலும், படிகள்மீது ஏறுவதாலும், பேசுவதினாலு முண்டாகும் ஆயாசம், இளைப்பு, களைப்பு, கஷ்டசுவாசம் முதலியவைகளை நீக்கிச் சுவாசப்பையைச் சீர்ப்படுத்தி, பலப்படுத்திச் சுபாவகுணத்தை யுண்டாக்கும். இது பால்நெய் முதலிய வஸ்துக்களை சீரணப் படுத்துவதில் மிகவும் கீர்த்திபெற்றது. இது ஏழைகளுக்கும் உபயோகப்படும்படியாகக் குறைந்த விலை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

20 நாள் மருந்து ரூ. 1 4 0 40 நாள் மருந்து ரூ. 2 0 0

தர்மசீலன் பிரஸ்,

மண்ணடி போஸ்டு, மதருஸ்.